1995 நவம்பர் 10]

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை சொல்ல முன் வந்துள்ளேன். 4½ ஆண்டு காலமாக -- இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே-- பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த முடியவில்லை என்ற ஆதங்கம் மக்களிடம் இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் உள்ளவர்கள் இதைக் கொச்சைப் படுத்திப் பேசுகிறார்கள். மாநிலத்திலே பஞ்சாயத்து தேர்தலை நடத்த முடியாதா? கேரள மாநிலத்திலே நடத்தி இருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்திலே நடத்தியிருக்கிறார்கள். மேற்கு வங்காளத்திலும் நடத்தி இருக்கிறார்கள். ஏன் நீங்கள் மட்டும் நடத்தவில்லை? ஏன் உங்கள் மாநிலத்திலே நடத்த முடியவில்லை? ஏன் திரும்பத் திரும்ப 'அமெண்டுமெண்ட்' கொண்டு வந்து ஒவ்வொரு முறையும் நீட்டித்துக் கொண்டு போகிறீர்கள்? இதுபோன்ற கேவலமான பேச்சுகள் பேசப்படுகின்றன. இதை நான் சொல்லவில்லை. ஊர் சொல்லுகிறது, உலகம் சொல்லுகிறது. ஏன் அந்த அளவுக்கு நம் நாட்டிலே படித்தவர்கள் இல்லையா? நமது மாநிலத்திலே இருக்கின்றவர்களுக்கு சட்டம் தெரியாதா? ஒவ்வொரு முறையும் கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கி விடுகிறார்களே, இது ஏன் என்று கேட்கிறார்கள். இதை அரசுதான் செய்ய வேண்டும். பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே 'கிளியர்'-ஆக இருக்கிறது. 'பேக்வேர்டு' கிளாஸுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றால் ஒதுக்கீடு செய்து விடலாம். நம்முடைய இஷ்டம். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் 'பேக்வேர்டு' மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். நீங்கள் ஒதுக்கவில்லையென்று சொன்னாலும், அதிகமாக 'பேக்வேர்டு' கிளாஸ்தான் இருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்றத்திலேயே பாருங்கள். அதிலேயும் 'பேக்வேர்டு கிளாஸ்' உறுப்பினர்கள் நிறைய இருக்கிறார்கள். பெண்களுக்கு இடம் கிடைப்பது இல்லை. அதனால்தான் மத்திய அரசு பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்துள்ளது. நம்முடைய அரிசன மக்களுக்கு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரதாஸ், ஒரு நிமிடம் உட்காருங்கள். அடுத்த இரண்டு சட்டமுன்வடிவுகளும் உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்டதால் அவைகளையும் மொத்தமாக எடுத்துக் கொண்டு ஒரே விவாதத்தில் முடித்து விடலாம். விவாதம் முடிந்த பிறகு ஒவ்வொரு சட்டமுன்வடிவும் வாக்கெடுப்புக்கு விடப்பெறலாம்.